# ஜாமக்காரன்

# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 1**

**JANUARY 2022 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


ஜாமக்காரன் JAMAKKARAN

கர்த்தருக்குள் அன்பானவர்களே



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த புது வருடத்தில் சமாதானத்தை வாழ்த்துதலாக கூறுகிறேன். இந்த **ஜனவரி** மாத பத்திரிக்கையை 2022 **மார்ச் மாதம்** தான் எழுத முடிந்தது. கடந்த வருடம் ஏற்பட்ட கொரோனாவல் மாதா மாதம் அனுப்பும் ஒழுங்கு கெட்டுபோனது அதோடு வேலை மிகுதியால் **அது அது மாதத்தில்** ஜாமக்காரனை கிரமமாக அனுப்ப இயலாது போனது வாசகர்கள் பொருத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

இந்த ஜனவரி மாதம் ஆரம்பம் முதல் ஏராளமான வாசகர்கள் **என்னை நேரில் காண** மிகவும் ஆசைப்பட்டனர். கடந்த **இரண்டு வருடமாக** எந்த கன்வென்ஷனிலும் நான் பிரசங்கிக்காததால் இந்தியா முழுவதும் உள்ள என்னை நேசிக்கும் கர்த்தருடைய பிள்ளைகளால் **என்னை** பார்க்கவோ **சந்திக்கவோ** இயலவில்லை. எனக்கும் கர்த்தருடைய வசனத்தை **இரண்டு வருடமாக** பகிர்ந்து கொள்ள (கொரோனா காரணமாக) **வாய்ப்பு உண்டாகாமல் போனதே** என்ற **ஏக்கம்** அதிகமாக உண்டு.

**JANUARY - 2022**

2020 & 2021ம் வருடங்கள் எல்லாருக்கும் வினோத கொரோனா கிருமியினால் பல குடும்பங்களில் தொடர் மரணங்களாலும் வேலையின்மையினாலும் கடன் பிரச்சனைகளாலும், விட்டில் அடைக்கப்பட்டவர்களாகவும் **பள்ளி, கல்லூரிக்கு** பிள்ளைகள் வெளியே செல்ல முடியாததால் **அந்த பிள்ளைகள்** பெற்றோருக்கு கொடுத்த பிரச்சனை ஏராளம். நீங்கள் அறிந்தபடி **நாங்களும்** குடும்பமாய் ஒருவர் பின் ஒருவராய் **கொரானாவில் பாதிக்கப்பட்டோம்**. இதில் **நான் ஒருவன்** தான் **செத்து பிழைத்ததுபோல** உயிரோடு வெளி வந்தேன். **என் மனைவி** முதல் **மருமகள்** பேர **பிள்ளைகள்** யாவரும் இரண்டாம் அலையில் பாதிக்கப்பட்டவர்கள். ஆனால் என்னைப்போல் இவர்களுக்கு பெரிய அளவில் பாதிப்பில்லை. இவர்கள் யாவரும் வீட்டிலேயே மாத்திரைகள் எடுத்துக்கொண்டு நான்கு நாட்களில் சுகமானார்கள்.

எங்கள் குடும்பத்தில் கொரோனாவில் பாதிக்கப்படாதவர்கள் **பெங்களூரில்** பிரின்ஸ்பாலாக இருக்கும் மருமகன் **Dr. பிரபுசிங்** அவர்களும், என் மகள் **ஷிபா,** பேத்தி **பிரார்த்தனா** (வயது 12) மட்டும் கொரோனாவில் அகப்படவில்லை.

2022ல் கர்த்தர் பல பிரச்சனைகளை கடக்கவைத்து எங்களை சுகத்தோடும் பெலத்தோடும் வாழ வைத்து பழைய நிலைக்கு கர்ததர் எங்களை கிருபையாக வழி நடத்தி வருகிறார். இதில் விசேஷம் என்னவென்றால் என் **ஊழியங்கள் எதுவும்** (கன்வென்ஷன் ஊழியம் தவிர) ஒரு நாளும் தடைபடாது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.** கர்த்தர் **எனக்கு கொடுத்த வாசகர்கள்** மூலமாக **என் அனைத்து தேவைகளையும்** குறையில்லாமல் சந்திக்க செய்தார். குறிப்பாக **கொரோனா** சிகிச்சைக்காக சேலம் SKS ஆஸ்பத்திரி செலவு **51/4 லட்சங்கள் முழுவதையும்** விசுவாச குடும்பங்கள் மூலமாகவே சந்தித்தார். **கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.** என் வாசகர்கள் எப்போது தொலைபேசியில் பேசினாலும் கேட்கும் கேள்வி **இப்போது எப்படியிருக்கிறீர்கள், உங்களின் 82 வயதில்** கொரோனாவால் பாதித்த **உங்கள் உடல் இளைத்து காணப்படுகிறதா?** என்பதே! கர்த்தரின் கிருபையால் 2 Kg. எடை எனக்கு **கூடியுள்ளது.** என் வீட்டார் நான் பழைய பெலம் பெற அவர்கள் கொடுத்த **சத்தான** விதவிதமான தீனி என் எடையை கூட்டிற்று. இம்மாதம் **என் வாசகர்களுக்காகவே** 2022 ஜனவரி மாதம் 28ம் தேதி **எடுத்த புகைப்படத்தை** உங்கள் பார்வைக்காக வெளியிடுகிறேன்.

**உங்கள் ஜெபத்துக்கு நன்றி**. உங்கள் **உதவிகளுக்கு** நன்றி. ஒவ்வொரு மாதமும் எங்கள் தேவைக்கேற்ப நீங்கள் அனுப்பிய உதவிக்கு நன்றி. இந்தியா மற்றும்


உலகமனைத்தும் உள்ள வாசகர்களும் வாசகர் அல்லாத விசுவாசிகளும், ஊழியர்களும் ஜெப குழுவினரும் எனக்காக குடும்பத்துக்காக ஏறெடுத்த **ஜெபங்களுக்கு நன்றி.**

கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசிர்வதித்து உங்கள் குறைகளையெல்லாம் நிறைவாக்கி ஆரோக்கியத்துடனும் சமாத்தானத் துடனும் வாழச்செய்வாராக. ஆமென்.



கர்த்தராகிய ஆண்டவரே தேவரீர் என்னை (எங்களை) இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் (நாங்கள்) எம்மாத்திரம்? என் (எங்கள்) வீடும் எம்மாத்திரம்?

சாமு 7:18, நாளா 17:16



கடந்த **82 வருடமாக** நான் வாழும் **வீடும் மாறவில்லை நானும் மாறவில்லை.**

173 வருடங்கள் பழமை வாய்ந்த வீடு ஆகும். இந்த வீடு **செம்மன் – செங்கல்** வைத்து கட்டப்பட்டு **சிமெண்டுக்கு பதில்** சுன்னாம்பு – மனல், **கடுக்காய், பணைவெல்லம்** ஆகிய யாவையும் குழைத்து **சாந்துபூசி கட்டப்பட்டது.** இந்த வீட்டின் உரிமையாளர் ஒரு **இஸ்லாமியர். அவருக்கு** மொத்தம் 19 **பிள்ளைகள். 3 பிள்ளைகள்** இந்த வீட்டின் 3 அறைகளில் **தூக்கு போட்டு** செத்ததால் இந்த வீட்டில்



**இப்போது நான் குடியிருக்கும் வீடு**

**வாடகைக்கு** குடியிருக்க 5 வருடமாக யாரும் வராததால் **பாழடைந்து இருந்தது.** வீட்டு உரிமையஸ்தர் **ரயில்வேயில்** Ist Grade Express **நீராவி இன்ஜின் டிரைவர் ஆகும்**. **என் தகப்பனாரும்** PWD டிபார்ட்மென்ட்டில் வேலை செய்ததால் அவர் என் தகப்னாரை நோக்கி உங்களுக்கும் **9 பிள்ளைகள்** சிறிய வாடகை வீட்டில் வசிக்கிறீர்கள், ஆகவே **என் வீடு 4604 சதுரஅடி** பரப்புள்ளது. **6 படுக்கை** அறைகளும் நீண்ட மூன்று வெறாண்டாக்களும் கொண்டது. அகவே நீங்கள் **வாடகை கொடுக்காமல்** 5 வருடங்கள் எங்கள் வீட்டில் குடியிருங்கள். நீங்கள் **கிறிஸ்தவர்** ஆனபடியால் **செத்துப்போன** என் மூன்று மகள்களின் **ஆவிகளை** குறித்து **பயப்படமாட்டீர்கள்** என்பதை அறிவேன் என்றார். ஆனாலும் **அந்த காலங்களில்** நான்கு ரூபாய் வாடகையில் தங்க கேட்டுக்கொண்டார். இதே வீட்டை அவர் **எங்களுக்கசே** 1976ம் வருடம் வெரும் **39,000 ரூபாய்க்கு விற்று** பெங்களூர் **குடியேறி விட்டார்.** **1939**ம் வருடம் இந்த வீட்டில் குடியேறிய எங்கள் குடும்பம் **இன்று வரை** இந்த வீட்டிலேயே வாழ்ந்து, இதே வீட்டில் வாழ்க்கையில் உயர்ந்ததும் தேவனின் **முன் குறித்தல்** என்று விசுவாசிக்றோம். இவ்வளவு பெரிய வீட்டை எங்களுக்கு ஏற்பாடு செய்து தந்த **தேவாதி தேவனுக்கு** மனமாற **நன்றியுடன் துதிக்கிறோம்**. ஆமென்



என் வாகனம் Royal Enfield (Bullet)1962ம் வருட மாடல் கடந்த 45 வருடமாக தொடர்ந்து உபயோகிக்கிறேன். இன்னும் அதைத்தான் உபயோகித்துக் கொண்டிருக்கிறேன். **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

நாங்கள் **குடும்பமாக செல்ல** நான் உபயோகிக்கும் **தவளை** உருவத்தில் Nano Car **1 லட்சத்து 40 ஆயிரம்** கொடுத்து புதியதாக வாங்கி கடந்த 12 **ஆண்டுகளாக** உபயோகிக்கிறேன்.



வாசகர்கள் யாவருககம் நாங்கள் குடும்பமாக புதுவருட வாழ்த்துதல் கூறுகிறோம்.

**Dr. Pushparaj**

**இரண்டு வருடங்களுக்கு** பிறகு

# கன்வென்ஷன் கூட்டம்

கர்த்தருடைய பெரும் கிருபையால் சுமார் **இரண்டு வருடங்களுக்கு** பிறகு கன்வென்ஷன் போன்ற கூட்டத்தில் பிரசங்கிக்கும் கட்டாயத்தில் **நிர்பந்திக்கப்பட்டேன். டிரைபல் மிஷன்** மஷனரி இயக்கத்தின் **ஸ்தாபகனும், டிரைபல் மிஷன்** (ஆணைகட்டி) பெத்தானி ஆஸ்பத்திரியின் ஸ்தாபகர்களில் **ஒருவனுமான என்னை** ஆணைக்கட்டி என்ற சிறு மலையில் **ஆதிவாசிகளுக்காக** கட்டப்பட்ட **ஆஸ்பத்திரியில்** பல கோடி செலவில் நவீன இயந்திரங்கள், உபகரணங்களுடன் **புதிதாக கட்டப்பட்ட ஆப்பரேஷன் தியேட்டரை டிரைபல் மிஷன்** பொது செயலரும், (ஆணைகட்டி) **பெத்தானி ஆஸ்பத்திரியின் மெடிக்கல் சூப்பிரின்டன்டென்ட் Dr. முரளிதர்,** M.D., அவர்களும் என்னை கேட்டுக்கொண்டதற்கு இனங்க சுமார் இரண்டு வருடங்களுக்கு பிறகு முதன் முறையாக என் வீட்டை விட்டு வெளியில் வெகுதூர பயணத்தை காரில் மேற்கொண்டேன்.



கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

சனி இரவு **ஆப்பரேஷன் தியேட்டருக்காக** பல லட்ச ரூபாய்கள் கொடுத்து உதவி செய்த **குடும்பத்தினரை** பல இடங்களிலிருந்து ஆனைக்கட்டி மலைக்கு அவர்களை குடும்பமாக வரவழைத்து அன்று இரவு நடந்த **நன்றி அறிவிப்பு கூட்டத்தில்** கலந்துகொள்ள செய்தோம். **நேரில் வர முடியாத** பண உதவி செய்த Helping Hand for Hospitals என்ற ஜெப குழு வெளிநாடுகளில் டாக்டர் தொழில் செய்ய சென்ற இந்திய டாக்டர்களின் ஜெப குழு தலைவர் Dr. Benjmin அவர்கள் நடத்தும் ஜெப குழுவில் இணைந்து ஜெபிப்பவர்களுக்கும் அந்த இரவு கூட்டத்தில் நன்றி கூற அந்த சிறப்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.



Dr. முரளிதர், M.D.,

நான் அந்த இரவு கூட்டத்தில் சுமார் 40 நிமிடங்கள் பேசினேன். ஆணைக்கட்டியில் அந்த ஆஸ்பத்திரி



Dr. புஷ்பராஜ்

தொடங்கப்பட்ட விதமும் **Dr.முரளிதர்** அவர்களும் **நானும்** கொரோனாவில் **அகப்பட்டு அந்த மரண நேரத்தில்** கர்த்தர் எங்களை காப்பாற்றி இன்று **உயிருடன்** மக்கள் முன் **நின்று பிரசங்கிக்கும்** அளவு கர்த்தர் எங்களை **பெலப்படுத்தினார். விதமும்** கர்த்தர் எங்களுக்கு **உயிர் பிச்சை** கொடுத்ததின் நோக்கத்தையும் தொடர்ந்து ஊழியத்தை நிறை வேற்றும் **பாக்கியம்** எங்களுக்கு கிடைத்த விதம் குறித்து **சுமார் 40 நிமிடம்** பகிர்ந்துகொண்டேன். அதோடு அந்த மரண தருவாயிலும் நாங்கள் **சுகப்படவேண்டும்** என்று ஜெபிக்காமல் எங்களைப்பற்றிய கர்த்தரின் **நோக்கமும், திட்டமும்** நிறைவேற வேண்டும் என்பதுதான் எங்கள் பாரமாயிருந்தது. கர்த்தர் **எங்களை எடுத்துக்கொண்டாலும்** சந்தோஷத்தோடு **அவர் கையில் போய் சேர வேண்டும்** என்ற எங்கள் ஜெபத்தை கர்த்தர் கனப்படுத்துவார் என்று நம்புகிறோம். இப்படிப்பட்ட பல விஷயங்களை **பகிர்ந்துகொண்டு** அதோடு ஒரு **சிறு ஆவிக்குரிய செய்தியும்** கூறியவுடன் கூட்டம் நிறைவுற்றது.

அதன்பின் நாங்கள் அனைவரும் **ஆப்பரேஷன் தியேட்டருக்கு** சென்று அங்கு பொருத்தி வைக்கப்பட்டுள்ள **அதி நவீன கருவிகளை** குறித்து **Dr. முரளிதர்** அவர்கள் விளக்கிய பிறகு **நான் ஜெபித்து பிரதிஷ்டை செய்து ஆசீர்வாதம் கூறி** அந்த இராத்திரி கூட்டம் முடிவுற்று விருந்துண்டு படுக்கைக்கு சென்றோம்.

மறுநாள் காலை **ஞாயிறு ஆராதனையில் சுமார் 1 1/2 மணி நேரம்** நின்றுகொண்டே கர்த்தருடைய செய்தியை அளித்தேன். கர்த்தர் எனக்கு கொடுத்த **பழைய பெலத்தோடு புதிய பெலத்தையும் தந்து** அவர் தன்கருவியாக மறுபடியும் என்னை இந்த வருடம் முதல் கூட்டத்தில் கர்த்தர் உபயோகித்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

**Dr. Pushparaj**

# கேள்வி? பதில்!

**கேள்வி :** கிறிஸ்தவ விசுவாசிகள் **பிறந்த நாள்** கொண்டாடலாமா?

**பதில் :** சிறு பிள்ளைகள் பிறந்தநாள கொண்டாடலாம், பிள்ளைகளுக்கு பிறந்த நாளின் நோக்கத்தை சொல்லி கொடுக்க வேண்டும். அப்படி கூறும்போது கர்த்தர் கொடுத்த **வாழ்வுக்கு, சுகத்துக்கு, ஆயுளுக்கு** அவைகளை பிள்ளைகளுக்கு நினைவூட்டி சி**று வயதிலேயே** கர்த்தர் அவர்களுக்கு தந்த வாழ்வுக்கு துதிக்க கற்றுக்கொடுத்து அவர்களை சந்தோஷப்படுத்த வெள்ளைகாரர் பாணியில் **கேக்வெட்டி** பிள்ளைகளை ஸ்தோத்திரத்தோடு அந்த இனிப்பை சாப்பிட்டு மகிழ்விக்க அவர்களை பயிற்றுவிக்கலாம். அதையும் ஒரு குறிப்பிட்ட வயதுவரை மட்டும் அவர்களும் அவர்களோடுகூட நீங்களும் கர்த்தரை துதித்து கொண்டாடி மகிழலாம். இவைகளை **வெளியரங்கமாக** கொண்டாடுவதை **கொஞ்ஜ கொங்ஜமாக குறைத்து** முடிவாக **பிறந்த நாள் கொண்டாட்டத்தை நிறுத்திவிடுங்கள்.** அப்படி நீங்கள் நடந்து கொள்ளாவிட்டால் ஒவ்வொரு வருடமும் பிறந்த நாள் கெண்டாடுவதையும். **பிறந்த நாள் பரிசையும்** அவர்கள் எதிர்பார்பார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் **பரிசு** கொண்டாட்டம் நின்று போனால் பிள்ளைகள் மனதளவில் மிகவும் சோர்ந்து போவார்கள். அதனால் சில எதிர் வினைகளும் ஏற்படும் அதனால்தான் சிறுபிள்ளைகளாயிருக்கும்போது கர்த்தரை துதிக்க கற்றுக்கொடுங்கள், கொஞ்ஜ கொஞ்ஜமாக கொண்டாட்டத்தை நிறுத்த முயல வேண்டும்.

**முதிர்ச்சியடைந்த** கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு **ஒவ்வொருநாள் காலை** படுக்கையில் கண் விழிக்கும்போதே அதை **பிறந்த நாளாக** கருதி அந்த காலையிலேயே **கர்த்தர் கொடுத்த புதிய நாளுக்காக,** புதிய **ஆயுளுக்காகவும், ஆரோக்கியத்துக்காகவும்** சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் ஒவ்வொரு புது நாளுக்காகவும் **தேவனை துதித்து மகிழுங்கள்**. கடந்த இரவு படுத்து உறங்கிய எத்தனைபேர் தூக்கத்திலேயே மரித்து போயிருக்கிறார்கள். ஆனால் நமக்கோ கர்த்தர் ஒரு புதிய நாளை ஒவ்வொரு நாளும் நமக்கு பிச்சையாக கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார். ஆகவே இரட்சிகப்பட்ட ஒரு விசுவாசிக்கு **ஒவ்வொரு நாளின் காலை வேளையும் பிறந்தநாள்தான்.** கர்த்தரை நான் எக்காலத்திலும் துதிப்பேன்,

**கேள்வி :** கடந்த 2021அக்டோபர் ஜாமக்காரனில் 3 to 5 பக்கங்கள் வரை சென்னை **ஆவடி ACA சபை** பற்றியும் **பாஸ்டர் காப்பிரீயேல்** பேசும் **பொய்யான அன்னிய பாஷைப்** பற்றியும் தெளிவாக எழுதினீர்கள். அப்படி அந்த ACA சபையில் இருக்கும் ஜாமக்காரன் வாசகர்களுக்கு ACA சபை பாஸ்டரின் **அன்னிய பாஷை** தவறு என்றும் அவர் தவறான **அன்னிய பாஷைஜெபத்தை** மக்களுக்கு **உபதேசிக்கிறார்** என்று எழுதிய, நீங்கள் **அந்த சபையை விட்டு போகாதீர்கள்** என்றும் கூறுகீறிர்கள். உங்களுக்கு **அந்த உபதேசம் தவறு** என்று தெரிந்தும் உங்கள் வாசகர்களை அந்த சபையை விட்டு போகாதீர்கள் என்று கூறியிருக்கிறீர்கள், உங்கள் ஜாமக்காரன் வாசகர்களை **இப்படியா குழப்புவது?** நாங்கள் எல்லோரும் உங்கள் ஜாமக்காரனில் பல **கள்ள ஊழியர்களையும்,** கள்ள **உபதேசத்தையும்** பற்றி நீங்கள் எழுதியதால்தான் இப்போது நாங்கள் மிக தெளிவாக இருக்கிறோம். ஆனால் ACA சபை பற்றி எழுதியது எங்களை குழப்புகிறது, இதே விஷயத்தைப்பற்றி **மற்றொரு** சகோதரி ஜாமக்காரனிடம் கூறுகிறார், நீங்கள் You-tubeல் Zac Poonan போன்ற நல்ல ஊழியர்களின் செய்தியை You-tube ல் கேட்பதில்லையா? கேட்டுப்பாருங்கள் அப்போது ACA சபை செய்தியை கேட்பதையும் உங்கள் எண்ணத்தையும் மாற்றிக்கொள்வீர்கள். இப்படி பலர் பலவிதமான கேள்வி கேட்டு (கொதரிவிட்டார்கள்) எழுதியுள்ளார்கள்.

## கொரோனா கால You-tube செய்திகளின் விளைவு

### பல கோடி செலவில் ஆவடி ACA சபைக்கு புதிய நவீன சபை கட்டிடம்

ஆவடி ACA சபை விசுவாசிகள் பெரும் பணக்காரர்கள் அல்ல. ஒரு சிலர் வெளி நாடு களில் வேலை செய்கிறார்கள். இப்போது **பல கோடி ரூபாய்கள்** செலவழித்து மிகப் பெரிய நவீன சபை கட்டிடம் கட்டப்படுகிறது. இதற்கான பணம் எப்படி திரட்டினார்கள்? You-tube தொடங்கிய ஆரம்ப காலமுதல் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ACA சபை பாஸ்டர் **காப்ரீயேல்** அவர்களின் நல்ல செய்திகள், நல்ல துதி, ஆராதனை பாடல்கள் ஆகியவைகள் வெளிநாட்டு தமிழர்களை கவர்ந்தது. மேலும் பாஸ்டர் காப்ரீயேல் அவர்களின் அயராத ஊழிய உழைப்பு, ஞாயிறு இரண்டு **ஆராதனைகள், பெண்கள்** கூட்டம், **கணவன் மனைவி** சிறப்பு கூட்டம், வாலிபர் கூட்டம், **கிராம ஊழியம்** வார நாட்களில் விசேஷ பைபிள் ஸ்டடி கூட்டம் இப்படிப்பட்ட இடைவிடாத கடின ஊழிய உழைப்பு மக்களை கவர்ந்தது. ஆலய விரிவாக்க விவரம் அறிவித்ததும் அதற்கு உதவி கரம் நீட்ட பாஸ்டர் கேட்டுக்கொண்டதும் மக்கள் குறிப்பாக வெளிநாட்டு வாழ் தமிழர்கள் பணத்தை அள்ளி வழங்கினார்கள் என்று கேள்விப்பட்டேன்.

## மொபைல் - You-tube

☐ அன்பானவர்களே. எனக்கு **மொபைல்** அதாவது **ஹேன்ட்போன்** ஆகியவைகளை உபயோகிக்கத் தெரியாது. Incomming-Outgoing இவைகள் மட்டும்தான் போனில் உபயோகிக்க எனக்கு தெரியும். மேலும் போன் வந்த காலத்திலிருந்து **மொபைல் போனை** (கைபேசி) நான் வைத்துகொள்வது கிடையாது. **மொபைல் போன்** இல்லாத **ஒரே ஊழியக்காரன் நான்தான்** என்று நினைக்கிறேன். காரணம் மொபைல் என் Privacy தனிமை சிந்தனைக்கு இடையூறாக இருக்கும் என்பது என் தனிப்பட்ட எண்ணம். இப்போது நான் வைத்திருக்கும் 9894261333 என்ற எண் உள்ள மொபைல் என் மனைவியினுடையது. அதைதான் நான் கையில் வைத்துள்ளேன்

You-tube பார்க்கும் **பழக்கம் ஏற்பட்டால்** எப்போதும் அதை **நோண்டி பார்க்கத் தோன்றும்.** பொது இடங்களில் நிறையபேர் **நடக்கும்போதும், பயணம்** செய்யும் போதும், **பஸ்ஸிக்கு** காத்திருக்கும்போதும் அதை **கடலைக்காய் உரிப்பதுபோல்** இரண்டு கைகளால் மொபைலை **நோண்டிக் கொண்டே** இருப்பார்கள், கவணித்திருப்பீர்கள். எனக்கு அது பிடிக்காது.

அதை மொபைலை நோண்டி பார்க்கும்போது அதிலுள்ள பல Interest ஆன விஷயங்கள் **நம்மை கவரும். பலவிதமான பொழுது போக்குகள்,** அரசியல், விதவிதமான **கிறிஸ்தவ**

**செய்திகள், காமெடிகள்** ஆகியவை **நம் நேரத்தை விழுங்கிவிடும்.** மெய்மறந்து **அதிலேயே லயித்துவிடுவோம்.** பிறகு தானாகவே நாம் அதற்கு **அடிமையாகிவிடுவோம்.** இப்படிப்பட்ட காரணங்களால் You-tubeபை திறந்து பார்க்க பயப்படுகிறேன்.

சிலபல பிரசங்கங்கள், **40 நாள்** உபவாச ஜெபம், இரவு ஜெபத்தையும் You-tube வழியாக ஏராளமான **ஊழியர்கள்** ஆங்கிலத்திலும், தமிழிலும் நடத்துகிறார்கள். அதை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் **பகலிலும்,** பிரயாணத்திலும் **கேட்டுகேட்டு** இப்போதைய பிள்ளைகள் **வீடியோ கேமுக்கு** அடிமைப்பட்டதைப் போல கிறிஸ்தவர்கள் **விதவிதமான பிரசங்கங்கள், அறுதல் செய்திகளை** கேட்டு கேட்டு அதற்கு **அடிமையாய் போனார்கள்.** பலர் காதில் டியுபை சொருகிகொண்டே **படுக்கையில் தூங்கிவிடுகிறார்கள்.** காலை **கண்விழிக்கும் போதுதான்** மொபைலை ஆப் செய்கிறார்கள். பிள்ளைகளை **வீடியோ கேமிலிருந்து** விடுவிக்க முடியாமல் கஷ்டப்படுகிறதை போல **பெரும்பாலான பெண் விசுவாசிகள்** You-tube பிரசங்கங்கள் கேட்பதிலிருந்து **விடுபடமுடியாமல்** தவிக்கிறார்கள்.

நிறைய பிரசங்கங்களை தொடர்ந்து நீங்கள் கேட்டால், **ஒரு பிரசங்கம்** கூட உருப்படியாக உங்கள் வாழ்க்கையில் பிரயோஜனப்படுத்த முடியாமல் போகும். ஜாக்கிறதை. இதுவே உங்கள் குடும்பத்தில் பல பிரச்சனைகளுக்கு காரணமாகிவிடும். பாஸ்டர்களுக்கும், ஊழியர்களுக்கும் முழு நாளும் **பிரசங்கத்தை தவிர** அவர்களுக்கு **வேறு வேலையில்லை.** ஆனால் உங்களுக்கு **வீட்டை கவணிக்கும்** பொறுப்பு உண்டு. அப்படியிருக்க இடைவெளியில்லாமல் எல்லா **பிரசங்கத்திலும்** எல்லா **ஜெபங்களிலும்** பங்குகொள்வது எப்படி?

ஆகையால் கர்த்தர் கொடுத்த நேரத்தை You-tube பிரசங்கங்களைகேட்டு கேட்டு வீனாக்காதீர்கள்.

- ☐ மேலும் ஜாமக்காரன் வாசகர்களுக்கும் ஆவடியில் உள்ள மற்ற விசுவாசிகளுக்கும் நான் **அக்டோபரில்** ACA சபை பற்றி எழுதிய **ஆலோசனையின்** நோக்கம் என்ன வென்றால் **ஆவடி** என்ற ஊரை பொறுத்தவரை அங்கு **எத்தனை சபைகள்** உண்டு. அவர்கள் **என்ன உபதேசத்தை** கைக்கொள்கிறார்கள் என்பது எனக்கு அறவே தெரியாது. ஆகவே **ஆவடி சபைகளில் உள்ள ஜாமக்காரன்** வாசகர்களுக்கும் குறிப்பாக ACA சபையில் உள்ள சில **ஜாமக்காரன் வாசகர்களுக்கு** மட்டுமே சொல்லப்பட்ட அறிவுரைதான் அது. இப்போதுள்ள அந்த ஆவடி ACA சபையில் **நல்ல வசன ஆகாரம்** கிடைக்கிறது. ஆனால்

**நீங்கள்** அவர்களின் **அன்னிய பாஷை உளரல்களை** கவணிக்காமல **பாஸ்டர் பேசும் பாஷையையும் நம்பாமல்** எல்லாவற்றையும் **தேவ வசனத்தோடு** ஒப்பிட்டு பார்த்து **நல்ல விஷயங்களை** கைக்கொள்ளுங்கள் என்று என் **கடிதம்** மூலமாகவும் **கைபேசி** மூலமாகவும் **ஜாமக்காரன்** மூலமாகவும் என விசுவாசகளுக்கும் ஆலோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவ்வளவே !

நானும் என் மனைவியும் இந்த **நவீன கால** சூழ்நிலையில் **ஆன்லைன்** மூலமாக You tube மூலமாக ஒரு **நல்ல ஆராதனையில்** கலந்துகொள்ள வேண்டுமென்பதற்காக வேறு வழி இல்லாமல் ஆவடி ACA சபை ஆராதனையில் You tube மூலமாக கலந்துகொள்கிறோம். **திருவனந்தபுரத்திலுள்ள** டாக்டர் **பிரேம் சுதாகர்** அவர்கள் நடத்துகிற **சபை ஆராதனை** வேத பாடம் இவைகளும் பிரயோஜனம் உள்ளது. ஆனால் அதை அவர்கள் Zoom வழியாக நடத்துவதால் என்னால் **அவர்களோடு ஐக்கியம்** கொள்ள முடியவில்லை. Zoom வழியாக நடக்கும் எந்த நல்ல பிரசங்களிலும் ஆராதனைகளிலும் பங்குகொள்ள **எனக்கு பொறுமையில்லை.** அவ்வளவாக விருப்பமும் இல்லை. **ஆவடியில்** ACA சபை ஒன்றில்தான் நல்ல பிரசங்கம் நடக்கிறது என்று நான் கூற விரும்பவில்லை. **ஆவடியில்** மற்ற சபைகளின் பிரசங்கம், உபதேசம் எதுவும் எனக்கு தெரியாது.

**கேள்வி :** Online அல்லது Zoom அல்லது TV வழியாக நடக்கும் சபை **திருவிருந்தில்** நாம் பங்கு பெறலாமா?

**பதில் : திருவிருந்தின் நோக்கத்தையே** Online and TV திருவிருந்து காட்சிகள் கெடுத்துவிடுகிறது. அது விசுவாசிகளின் **ஐக்கிய விருந்து** ஆகும். அதில் ஒருவருக்கொருவர் ஜாதி வித்தியாசம் பார்க்காமல் **தங்கள் ஐக்கியத்தை** காண்பிக்கும் **நல்ல சாட்சியை** வெளிப்படுத்தும் ஆவிக்குரிய சாக்கிரமந்து ஆகும். அதை நீங்கள் Onlineயிலும் TV யிலும் பார்க்கும்போது பாஸ்டர் **அப்பம் பிட்டுகொடுப்பதும்** திராட்சை ரசம் **பருகுவதும்** ஒரு **சினிமா பார்ப்பது போல்** அமையும். **திருவிருந்து** ஒரு **சடங்கு** அல்ல. **பயபக்தியுடன்** தெய்வ பிரசன்னத்தில் சரியான விசுவாசிகளுடன் நேரில் **கைகொள்ளவேண்டியதாகும்** இப்போதுள்ள சூழ் நிலையில் ஆராதனைக்காக **ஆலய கட்டிடத்துக்கு** நேரில் போகவழி இல்லாததால் **ஆராதனையை மட்டும்** Online மூலம் பங்குபெறுவது தவறில்லை. எல்லாவற்றிக்கும் ஒரு முடிவு உண்டு. சீக்கிரமே கர்த்தரின் கோபம் தனிந்து நாம் சுதந்திரமாக ஆராதிக்கவும் கர்த்தருடைய பிள்ளைகளின் ஐக்கியத்தில் பங்கு பெறவும் கர்த்தர் அருள் புரிவாராக.

SELECTED

**கேள்வி : பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதைக் குறித்து கிறிஸ்தவர்களில் இரு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றனவே ! திருமறையின் அடிப்படைடயில் உங்கள் ஆலோசனை என்ன ?**

**பதில் :–** இவ்வாண்டின் பொங்கல் திருநாளையொட்டி சமூக ஊடகங்களில் அநேக கிறிஸ்தவத் தலைவர்கள் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்திருந்ததை கண்டேன். கிறிஸ்தவர்கள் பொங்கல் கொண்டாடலாமா என்பதைக்குறித்து ஆதரித்தும் எதிர்த்தும் வெளியிடப்பட்டிருந்த கருத்துக்களை வாசித்தேன், கேட்டேன். இந்த ஆண்டு பொங்கல் பண்டிகை முடிந்து விட்டாலும் திருமறையின் அடிப்படையில் இவ்விழாவைக் குறித்து ஆராய நமக்கு உதவும் என நம்பி இக்கட்டுரையை எழுதுகிறேன்.

**பண்டிகை:** பண்டிகை என்றால் பொது மக்களின் கொண்டாட்டம் என்று பொருள், சமயம், மதம், மொழி போன்ற தடைகள் இன்றி அனைவரும் பங்குபெறும் உரிமை அளிப்பது ஆதியில் தமிழர் **பண்டங்களை ஈகை** செய்யும் பொருட்டு கொண்டாடியமையால் பண்டிகை ஆயிற்று.

**பொங்கல் திருநாள் மட்டுமல்ல, எந்த சமயத்தையும் சாராதவைகளைப் போலத் தோற்றமளிக்கும் இன்னும் சில பண்டிகைகளையும் கொண்டாடலாமா என்னும் கேள்வி எழுகின்றது.** ஒரு சில விசுவாசிகள் அப்படிப்பட்ட பண்டிகைகளைக் கொண்டாடுவதில் தவறில்லை, என்றும் இன்னும் சிலர் அப்படிக் கொண்டாடகூடாது. அப்படிப்பட்ட பண்டிகைகளுக்குமே சமயத் தொடர்பு இருக்கிறது என்றும் கூறுகின்றனர். எந்தப் பண்டிகையை கொண்டாடுவதற்குமுன் அவைகளின் பின்னணியை அறிந்துகொள்ள வேண்டும். அப்பண்டிகைக்கு வேறுமத பின்னணி உள்ளது என அறிந்த பிறகும் கொண்டாட விரும்பினால் அது அவர்களுடைய **விசுவாச நிலையை** காட்டுகிறது. அவர்களை வேத வசனத்தின்படி வாழும் கிறிஸ்தவ விசுவாசி என்று கூறவே முடியாது.

**பொங்கல் திருநாளின் பின்னணி :– மார்கழி** மாதம் விரதம் மெற்கொள்ளும் இளம்பெண்கள் **பால்** மற்றும் **பால்** பொருட்களை **உணவில் சேர்த்துக்கொள்வதில்லை.** இவ்விரதத்தை **முடித்து வைப்பதற்காக** தை **முதல் நாளில்** புத்தரிசியில் **பால் சேர்த்துப்** பொங்கல் வைக்கும் நாளே **தைப் பொங்கல்** திருநாள். **புத்தரிசி** என்று கூறப்படுவது அவ்வாண்டின் அறுவடைக்குக் காரணமாயிருந்த **சூரியன் இயற்கை** மற்றும் **கால்**

**நடைகளை** வணங்கி அவைகளுக்கு நன்றி கூறும் பண்டிகையாக அனுசரிக்கப்படுகிறது. எனவே உறுதியாக கூறலாம் பொங்கல் பண்டிகை இந்துமத தொடர்புடையது ஆகும்.

**நம் கலாச்சாரத்துக்கு மரியாதை :** நம்முடைய கலாச்சாரத்திலுள்ளவர்கள் மற்றும் நம் மொழி பேசும் மக்கள் கொண்டாடும் சில பண்டிகைகளைக் (மதம் சாராத பண்டிகைகள் போலத் தோன்றும் அந்த பண்டிகைகள்) கொண்டாடுவதின் மூலமாகத்தான் நம்முடைய **கலாச்சாரம்** மற்றும் நம்முடைய **மொழியின் மீது** மரியாதையுடையவர்களாயிருக்கிறோம் என்றோ. நம்முடைய நாட்டு **மக்களை நேசிக்கிறோம்** என்றோ முடிவு கட்டிவிட முடியாது. அப்படிக் கொண்டாடுவதால் அவர்களும் **நம்மை மதித்து** ஏற்றுக்கொள்வார்கள் என்று தவறாக எண்ண வேண்டாம். நாம் **திருமறையின் அடிப்படையில் சாட்சியாக** வாழ்வதன் மூலமாகவே மற்றவர்கள் வாழ்வில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

**பொருள் உணர்ந்து கொண்டாடுதல்**

பிற மத நண்பர்கள் தாங்கள் கொண்டாடும் பண்டிகைகளைக் கிறிஸ்தவர்களும் கொண்டாட வேண்டும் எனப் பொதுவாக (சிலரை தவிர) எதிர்பார்ப்பதில்லை, நாமும் நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் போன்ற **பண்டிகைகளை** பிற மத நண்பர்கள் கொண்டா வேண்டும் என்று **எதிர்பார்க்க** கூடாது. அவர்கள் மெய்யான இரட்சகரைக் கண்டடைய வேண்டுமென்றே நாம் எதிர்பார்க்கிறோம். உண்மையான கிறிஸ்தவர்கள் பொருளுணர்ந்து கிறிஸ்மஸ் கொண்டாடுகிறார்கள்.ஆனால் **வெளித்தோற்றத்தில் கிறிஸ்மஸ் கொண்டாடுகிற** அனைவரும் கிறிஸ்தவர்களாகிவிட முடியாது. அப்படிக் கொண்டாடுபவர்களை நாம் பாராட்டுவதில்லை. அதைப்போலவே வெளித்தோற்றத்தில் பொங்கல் கொண்டாடலாமே என்று கூறிக் கொண்டிருப்பவர்ளை அவர்களே ஏற்க மாட்டார்கள்.

அந்த நாளில் அவர்கள் தங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் இயற்கைக்கு நன்றி கூறுவதுபோல. நாமும் **அறுவடைக்காக** நம்மைக் படைத்த இயேசுக்கு **நன்றி கூறுவோம்** என்றும் சிலர் கூறலாம். நாம் பெறும் **அறுவடைக்காக** நாம் **ஒரே நாளில்** நம்மைப் படைத்தவருக்கு நன்றி கூறி நிறைவடைய முடியாது. வாழத்துவது தவறில்லை. ஆகவே பல மதம் பின்னணியில் உள்ளவர்களை கிறிஸ்தவர்கள் வாழத்துவதை தவிர்க்கவும் முடியாது.

ஆனால் அவர்களைப் போலவே நாமும் அவர்களோடு இனைந்து கொண்டாடினால்தான் அவர்களுடன் நல்லினக்கமாக இருக்க முடியும் என்று நினைத்தால் அது **மனிதரைப்** பிரியப்படுத்தும் **முயற்சியே தவிர வேறொன்றில்லை.** அது நம் கர்த்தரை பிரியப்படுத்தாது. ஒரு குறிப்பிட்ட சமயத்தினரின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெறுவதற்க்காக அவர்களோடு **ஒத்துப்போகும்** நோக்கத்தில் கொண்டாடத் தேவையில்லை.

**கேள்வி :** நாலுமாவடியாரின் புது அறிமுக ஜெபத்தைப்பற்றி கூறுங்கள்?

**பதில்:** கீழே கானும் படத்தில் சத்தியம்TV சேனலின் மேடையில் சகோ. மோகன் லாசரஸ் அவர்கள் முகம் குப்புற விழுந்து கேமராவுக்காக கொஞ்சம் முகம் தூக்கி தேம்பி தேம்பி அழுது ஜெபிக்கிறதை காண்கிறீர்கள். இதை யோகாவில் சர்வாங்க நமஸ்காரம் என்பார்கள், அதாவது சர்வ அங்க நமஸ் காரம். இந்துக்கள் பெண்கள் **நேர்ச்சைக்காக** தரையில் முகம்




**குப்புற விழுந்து** உருண்டுக் கொண்டே வேண்டுதல் செய்வார்கள். ஏறக்குறைய அதைப்போலவே சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களும் தான் எப்போதும் இப்படிதான் என் அறையில் **முகம்குப்புற விழுந்து** வேண்டுதல் செய்வேன். கர்த்தர் அதை கேட்கிறார் என்று கூறுகிறார்.

இது **பழைய ஏற்பாட்டு** பரிசுத்தவான்கள் ஜெபிக்கும் முறையாகும். **இதை நாமும் பின்பற்றினால்** கர்த்தர் நம் ஜெபத்தை நிச்சயமாக கேட்பார் என்று ஆலோசனையாக கூறுகிறார். அப்படியே **உங்கள் வீடுகளில்** சென்று இதை பயிற்சித்து பாருங்கள் **மற்ற ஜெபத்துக்கும்** முகம் குப்புற **விழுந்து ஜெபிக்கும் ஜெபத்துக்கும்** உள்ள வித்தியாசம் அறிவீர்கள் என்றார்.

வேதத்தில் **பழைய ஏற்பாட்டு** பரிசுத்தவான்களும் சரி – **புதிய ஏற்பாட்டு** பரிசுத்தவான் களும் சரி **யாராவது முகம் குப்புற விழுந்து ஜெபம் செய்துள்ளார்களா?** என்பதை **இயேசு விடுவிக்கிறார்** விசிறிகள் யாராவது **பைபிளில் சுட்டிக்காட்டி** எனக்கு எழுதுங்கள் அதை அப்படியே ஜாமக்காரனில் வெளியிடுகிறேன்.

**இயேசு விடுவிக்கிறார்** கூட்டத்தில் கூடுகிற மக்கள் கூட்டம் **வேதம் சரியாக வாசிக்காதவர்களின்** கூட்டம் என்று இதன் மூலம் விளங்குகிறது.

இயேசு உங்கள் **வயிற்று வலியை** காண்பிக்கிறார்

இயேசு **உங்கள் பெயரை** தெளிவாக காட்டுகிறார்.

இயேசு உங்கள் **கேன்சர் கட்டி** கர்ப்பையில் இருப்பதை காட்டுகிறார்

இயேசு HIV **எயிட்ஸ் வியாதியஸ்தனை** காட்டுகிறார் அவனை

இயேசு **சுகமாக்குவதையும் காட்டுகிறார்** என்கிறார். ஆனால் இந்த தீர்க்கதரிசனத்தை

எந்த **டாக்டர்களும்** இதுவரை **நம்பவில்லை.** எயட்ஸ் வியாதியால் பாதிக்கப்பட்ட **வியாதிஸ்தனை** பரிசோதித்த டாக்டர்கள் குழுவும் அவனை பரிசோதித்து அவனுக்கு **எயிட்ஸ்** கிருமிகள் இரத்தத்தில் **முன்பைவிட அதிகமாகியிருக்கிறதே** தவிர குறையவில்லை என்று கூறினார்கள். ஆனால் **இயேசு விடுவிக்கிறார்** மோகன் லாசரஸ்ஸிடம் இணைந்து டிரஸ்டிகளில் ஒருவரான **Dr. அன்பு** அவர்கள் மட்டும்தான் **மோகன் C. லாசரஸ்** தீர்க்க தரிசனத்தை உண்மை என்று சர்டிபிகட் கொடுக்கிறார்.

மேலும் மோகன் C. லாசரஸ் கூறியதவது இயேசு உங்கள் முன் **சரிரத்தோடு வந்து நிற்பார்** அதன் பின் நீங்கள் ஜெபித்து பாருங்கள் ஜெபத்துக்கு பதில் உடனே கிடைக்கும். **மோகன் லாசரஸ்** ஆகிய நானும் தினசரி என் ஜெபத்தில் **இயேசுவின் முகத்தை** நேருக்கு நேர் **கண்டபின்தான் ஜெபிக்க** தொடங்குவேன். இப்போது TVயை பார்த்துக்கொண்டிருக்கிற நீங்களும் இப்போதே என்னோடு சேர்ந்து ஜெபியுங்கள் ஒவ்வொருவரும் **இயேசுவின் முகத்தை முகமுகமாய் கண்டு ஜெபிக்க முடியும்** என்றார். இதற்கான விளக்கத்தையும், விமர்சனத்தையும் நான் முன்பே ஜாமக்காரனில் விளக்கியிருக்கிறேன். ஆனால் இப்போது மோகன் C. லாசரலஸ் அறிமுகப்படுத்தியிருக்கும் **முகம்குப்புற** விழும் ஏற்பாட்டை **பெந்தேகோஸ்தே பாஸ்டர்மார்களே** ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இப்போதே பல பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்மார்கள் **ஜீப்பா வேஷ்டி** அணிவதை அவமானமாக கருதுகிறார்கள். எல்லாரும் **பேண்ட் கோட்டு டைக்கும் சபாரி உடைக்கும்** மாறிவிட்டார்கள். மேலும் பெரும்பாலான பாஸ்டர்களுக்கு **வயிறு** போலீஸ்காரர் **வயிறு போல்** வளர்ந்துவிட்டது. இப்படிப்பட்ட நிலையில் இவர்கள் எப்படி **முகம் குப்புற விழுந்து** ஜெபிக்க முடியும். அப்படி முகம் குப்புற படுத்தால் இவர்களை திரும்ப யார் தூக்க முடியும். **ஆமையை** திருப்பி போட்டதைபோல் இருக்கும். இவர்களை திரும்பவும் நிமிர்த்த **நாலுமாவடியிலிருந்து மோகன்** அவர்கள் ஆட்களை அனுப்பி **புரட்டிப்போட்டால்** தான் அவர் பழைய நிலைக்கு வர முடியும்.

வேதத்தில் **ஆபிரகாம்** கர்த்தரை கண்டவுடன் முகம் குப்புற விழுந்து நான் **ஒரு குப்பை,** நான் **ஒரு தூசி,** தலை **நிமிர்ந்து பேச** தகுதியறறவன் என்று கூறினான். ஆனால் ஜெபிக்கவில்லை, **ஆபிரகாம் & ஈசாக்கு, யாக்கோபு** யாரும் முகம குப்புற விழுந்து ஜெபம் செய்ததாக வேதத்தில் வாசிக்க இயலாது. இந்த **முகம் குப்புற விழுந்து** ஜெபிக்கும் இந்த **புது ஐடியா** இவருக்கு எப்போது வந்தது? இவர் **ஊழியம் ஆரம்பித்த நாட்களிலிருந்து** இன்று வரை எந்த கூட்டத்திலாவது இதைப் பற்றி கூறியிருக்கிறாரா? **அப்போதெல்லாம் வராத** இந்த ஐடியா இந்த **புது டிரண்ட்** இப்போது எப்படி இவருக்கு உதித்தது ?

**பணவரவு** குறைந்து விட்டதா? நானும் அந்த ஜெபத்தை சத்திய் TVயில் கண்டேன். என்னமாய் நடிக்கிறார் ! என்னமாக **அழுகிறார்?** **தேம்பி தேம்பி அழும்** அந்த காட்சியை

காணும் **பெண்களின் கூட்டம்** ஒருவேளை அவரின்மேல் பரிதாபப்படுவார்கள். அப்படி பரிதாபப்படும் நாலுமாவடி **கூட்டம் யாவரும்** TV **சீரியலை பார்த்து அழுது பழக்கமுள்ளவர்களாக** இருப்பார்கள்.

**மக்களின் அனுதாபம்பெற** எண்ணமாய் இவர்கள் ஏமாற்றுகிறார்கள். ஏன் ஏமாற்றுகிறார் என்ற வார்த்தையை நான் ஏன் உபயோகித்தேன் என்றால் அந்த நிகழ்ச்சிக்கு பின் **அதே மேடையில்** எத்தனை முறை இவர் ஜெபித்தார். அப்போதெல்லாம் ஏன் இவர் **முகம் குப்புர விழுந்து ஜெபிக்க வில்லை.** அவர் மனைவியை கேட்டு பாருங்கள், வீட்டில் **முகம் குப்புற விழுந்தா** அவர் ஜெபம் ஏறெடுக்கிறார்? இப்படிப்பட்ட **கள்ள ஊழியங்கள்,** கள்ள **தீர்க்கத்தரிகள்** கூறும் **திடீர் வெளிப்பாடுகளை** நம்ப வேண்டாம். ஜாக்கிறதை !

**கேள்வி :** உண்மையான மிஷனரி ஸ்தாபனங்களின் விலாசங்களை ஜாமக்காரனில் எழுதி அறிவிக்க கேட்டிருந்தோம். நீங்களும் சுமார் 6 மிஷனரி ஸ்தாபனங்களின் விலாசங்களை வெளியிட்டிருந்தீர்கள். ஆனால் அதில் **GEM மிஷனரி ஸ்தாபகர்** திரு. **அகஸ்டின் ஜெபகுமார்** அவர்களின் மிஷனரி **ஸ்தாபனத்தின் விலாசத்தை ஏன் குறிப்பிடவில்லை?** ஆனால் பல வடங்களுக்கு முன் காணிக்கை அனுப்ப வேண்டிய உண்மையான மிஷனரி **ஸ்தாபனங்களின்** பட்டியலில் GEM சகோ. அகஸ்டின் ஜெபகுமார் அவர்களின் **விலாசம்,** வங்கி விவரம் யாவும் **ஜாமக்காரனில்** எழுதியிருந்தீர்கள். இப்போது அவர் விலாசம் மட்டும் வெளியிடாமல் விட்டு விட்டீர்களே ஏன்?

**பதில் :** சகோ, **அகஸ்டின் ஜெபக்குமார்** அவர்களின் வருடாந்திர கன்வென்ஷனுக்கு பல வருடங்களுக்குமுன் **பீகாருக்கே** அவர் தலைமை ஸ்தாபனத்துக்கு என்னை அவர் அழைத்திருந்தார். நல்ல திட்டமிட்ட மிஷனரி ஊழியம் **GEM ஸ்தாபனம்** மூலம் நடைபெறுகிறதை நேரில் கண்டு, கேட்டு அறிந்தேன், **பண விஷயத்திலும்** அவர் உண்மை உள்ளவர் என்பதையும் வெளிநாட்டு ஊழியத்திலும், இந்தியாவின் அவர் பிரசங்கித்த ஊழியத்திலும் சிலரிடம் கேட்டறிந்தேன்.

ஆனால் சுமார் 3 வருடங்களுக்கு முன் திடீரென்று சகோ. அகஸ்டின் ஜெபகுமார் **தீர்க்கதரிசனம்** கூற ஆரம்பித்துவிட்டார். **ஏஞ்சல் TV சாது போல் நாலுமாவடி** போல **பால் தினகரனைப்போல உலக நாடுகளைப்பற்றி** திடீரென்று **பொய் தீர்க்க தரிசனம்** கூறிவிட்டார். **ஈரான் யுத்தம்** பற்றிய **தீர்க்கதரிசனம்** 14ம் தேதி யுத்தம் தொடங்கும் என்றார். நான் சொல்லும் இந்த தீர்க்கதரிசனம் உண்மையாக நடக்கும். அப்படி குறிப்பிட்ட 14ம் தேதி நானும் உயிரோடு இருப்பேன் நீங்களும் உயிரோடு இருப்பீர்கள் கூறிய தீர்க்கதரிசனம் நடவாமல் போனால் என்னை நேரில் கேளுங்கள் என்று **சவால் விட்டார். 14ம் தேதியும் வந்தது** மாதங்களும் கடந்தது. ஆனால் அவர் கூறிய **தீர்க்கதரிசனம்** நடைபெற வில்லை.

சரி அதோடு தீர்க்கதரிசனம் கூறுவதை நிறுத்திக்கொண்டிருந்தால் பரவாயில்லை.

மறுபடியும் **புது தீர்க்கதரிசனம் ஒன்றை** கூறினார். **அந்த தீர்க்கதரிசனமும் நடைபெறவில்லை**. இவருக்கு எதற்கு **இந்த வேண்டாத பெருமை? கான மயிலாட** கண்டிருந்த **வான்கோழி** என்ற பழங்கதையை சிறுபிள்ளைகளுக்கு சொல்லி கொடுக்கும் உதாரணத்தைபோல இவரும் தனக்கும் தீர்க்கதரிசன **வரம் உண்டு** என்பதை காண்பிக்க அவரை அறியாமல் தீர்க்கதரிசனம் கூறிவிட்டார்.

கர்த்தர் சகோ. அகஸ்டின் அவர்களுக்கு **விசேஷ பிரசங்கிகும் தாலந்துகளை** கொடுத்துள்ளார். சகோ. அகஸ்டின் ஜெபகுமார் அவர்களுக்கு ஜாமக்காரனை போல **சபையில், ஊழியர்களிடத்தில், சபை விசுவாசிகளிடத்தில்** காணப்படும் குறைகளை வசனத்துக்கு விரோதமான செயல்களை வெளிப்படையாகவும், **பச்சையாகவும் தைரியமாக** பிரசங்கிக்கும் துணிச்சலான **தாலந்தை** கர்த்தர் கொடுத்திருக்கும்போது இவருக்க எதற்கு **உலகத்தைப்பற்றிய பொய்** தீர்க்கதரிசனம். ஆகவே அவர் கூறிய **தீர்க்கதரிசனங்கள்** நடைபெறததால் அதை அவருக்கு **கர்த்தர் கூறவில்லை** என்று விளங்குகிறது அல்லவா ! ஆகவே அவர் **பொய் சொன்னார்** என்று நாம் தைரியமாக கூறலாம்.

சகோ **அகஸ்ட்டின் ஜெபகுமார்** பேசிய அந்த **தீர்க்கதரிசன பிரசங்க கேஸட்டை** கேட்ட பிறகுதான் **அவருக்கு என்னை பிடிக்காது** என்றாலும் ஒரு நல்ல ஊழியர் என்ற நிலையில் அவரின் பொய்யான **தீர்க்கதரிசன செய்திக்காக** மிகவும் வேதனைப்பட்டேன். ஆனால் அதே சமயம் அவர் பேசிய தீர்க்கதரிசனம் தவறு என்று அவர் பிரசங்கித்த எந்த கூட்டத்திலும், தன்னுடைய **மாதாந்திர** பத்திரிக்கையிலும் ஒத்துக்கொள்ளவில்லையே! ஆகவேதான் அவரின் **மற்ற ஊழியங்களைப்** பற்றியும் **அவரைப்பற்றி கேள்விப்பட்ட** நல்ல விஷயங்களைப் பற்றியும் **எனக்கு சந்தேகம் எழும்ப ஆரம்பித்ததால்** மிஷனரி ஸ்தாபனங்களின் விலாசங்கள் ஜாமக்காரனில் குறிப்பிடும் போது **GEM மிஷனரி** ஊழிய விலாசத்தை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தவில்லை.

**கேள்வி:** திரியேக தெய்வத்தைப்பற்றி ஏராளமான பிரசங்கிமார்கள் விதவிதமாக பிரசங்கிறார்கள். **ஒருவராய் பெரிய காரியங்களை** செய்கிறார் என்பது முரண்பாடாக தெரிகிறதா ? நீங்கள் ஏன் அதை குறித்து எழுதக்கூடாது. உங்கள் நம்பிக்கை என்ன?

**பதில்: விசுவாச பிரமானத்தில்** கூறப்படுவதுதான் என் நம்பிக்கை. ஆனால் நியாய தீர்ப்பு முடிந்து நாம் பரலோக செல்லும்வரை பிதா – குமாரன் – பரிசுத்த ஆவியானவர் திரியேகமாக மனிதர்களாகிய நமக்காக செயல்பட்டு பூமி அழிந்து, புதிய வானம், புதிய பூமி யாவும் நீங்கிப்போய் நாம் பரலோகத்தில் போய் சேர்ந்தவுடன் நாம் ஆராதிக்கும் திரியோக தெய்வம் ஏகதெய்வமாக ஒருவராய் செயல்படுவார் என்பது என் யூகம் ஆகும். இதற்கு வேத வசன

ஆதாரம் நாட வேண்டாம். நியாயதீர்ப்பு நாம் பாஸ் ஆகிவிட்டால் போதும். அதன்பின் எப்படியிருப்போமோ? நான் அறியேன் என்று பவுல் கூறியதை போல்தான் என்னாலும் பதில் கூற முடியும். என் அறிவுக்கு அவ்வளவுதான் தெரியும்.

**கேள்வி:** நீங்கள் பெந்தேகோஸ்தே சபைகளை வெருக்கவில்லை என்று எங்களுக்கு விளங்குகிறது. அப்படியானால் **நல்ல பெந்தேகோஸ்தே சபை** அல்லது நல்ல ஊழியர் யார் என்பதை எப்படி கண்டுபிடிப்பது?

**பதில்: நல்ல** பெந்தேகோஸ்தே சபை என்று நான் குறிப்பிடவில்லை **சரியான** பெந்தேகோஸ்தே சபை என்று கூறுவதுதான் சரி. **சரியான** என்றால் **வசனத்தை** சரியானபடி புரிந்துகொண்டு வசனத்தை வசனத்தோடு ஒப்பிட்டு பார்த்து வசனத்தை செயலில் கைகொள்ளும் சபைதான் சரியான சபை ஆகும். குறிப்பாக **ஏசாயா** 28:11,12 வசனத்தை **பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷைகளினாலும் இந்த ஜனத்தோடு பேசுவார்.** இதுவே **ஆறுதல்** இந்த குறிபிட்ட வசனத்தை பரிசுத்த ஆவியின் **அன்னிய பாஷை வரத்தோடு** ஒப்பிட்டு **இந்த பாஷையை தான்** நாங்கள் பேசுகிறோம் என்கிறார்கள். இந்த வசனத்தை இப்போது **பெந்தேகோஸ்தே** சபைகளில் பேசும் **அன்னிய பாஷையோடு** ஒப்பிடும் **எந்த சபையையும்** அவர்கள் பேசும் **பாஷைகளையும் நம்பாதீர்கள்.** அந்த வசனத்தை அன்னிய பாஷையோடு ஒப்பிடும் **ஊழியர்களை, பாஸ்டர்களை** நம்பாதீர்கள். குறிப்பாக **நாலுமாவடி மோகன் C. லாசரஸ், ராபின்சன்,** காலை நம்பிக்கை TVயில் **மிக அதிகமாக உளரும்** பாஸ்டர் **சேனாதிபதி** பேசும் **ஷக்கலக்கா (பேபி)** என்ற வார்த்தையை பிரசங்கமாக கூறும் இப்படிப்பட்ட ஊழியர்களை நம்பவே நம்பாதீர்கள்.

நம்பிக்கை TVயில் திருஷ்டி பரிகாரம் என்று இந்துக்கள் கூறுவது நல்ல செய்திகளை அளிக்கும் நம்பிக்கை TV இப்படிப்பட்டவர்களை எப்படி அனுமதிக்கிறார்ளோ?

ஏசா 28:11,12 வசனங்கள் **இஸ்ரவேலை பற்றி** கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசி மூலம் எச்சரிக்கும் வார்த்தை இந்த வார்த்தை அப் 2 அதிகாரத்தில் கூறப்படும் **பற்பல பாஷையோடு** ஒப்பிடும் எந்த பாஸ்டருக்கும் எந்த ஊழியருக்கும் **தேவ வசனம்** சரியாக தெரியவில்லை. இவர்கள் யாரும் வேத பாடமே படிக்கவில்லை! **மக்களை குழப்புகிறார்கள்** என்று அர்த்தம். சாதாரண இந்த வசனத்துக்கே சரியான விளக்கம் அரியாத இவர்கள் **சபை மக்களை** தங்கள் கூட்டத்துக்கு வரும் மக்களை **முழு இரவு ஜெபத்துக்கு** அல்லது **வாங்க ஜெபிக்கலாம்** என்ற நிகழ்ச்சிக்கு வரும் மக்களை எப்படி முட்டாள்களாக்குகிறார்கள் என்று அறியுங்கள்.

ஏசாயா 28:11,12 வசனங்களுக்கு அதன் **தீர்க்கதரிசன மறைபொருளுக்கு** யார் சரியான அர்த்தம் கூறுகிறார்களோ ! அவர்கள் **சரியான ஊழியக்காரர்கள்,** அந்த சபை **சரியான சபை** என்று நம்பலாம்.

# ஜாதி மத ரீதியான தாக்குதல்கள்...
## வெறுப்பை தூண்டும் பேச்சுக்கு உங்களின் மௌனமே காரணம்
# மோடிக்கு ஐஐஎம் மாணவர்கள் கடிதம்

இந்தியாவில் **அதிகரித்து வரும்** மத **வெறுப்பு உணர்வு பேச்சுக்கள் மத ரீதியான தாக்குதல்களுக்கு** எதிராக குரல் கொடுக்கும்படி பிரதமர் **மோடிக்கு** ஐஐஎம் கல்லூரி **பேராசிரியர்கள் மாணவர்கள்** வெளிப்படையாக கடிதம் எழுதி உள்ளனர்.



இது குறித்து **பெங்களூர்** மற்றும் **அகமதாபாத் ஐஐஎம்** (இந்திய மேலாண்மை கல்லூரி) **கல்லூரிகளில்** பணியாற்றும் **பேராசிரியர்கள், மாணவர்கள்** உட்பட 183 பேர் பிரதமர் **மோடிக்கு** எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது.

**உத்தரகாண்ட் மாநிலம்** ஹரித்வாரில் சமீபத்தில் நடந்த **இந்து மத கூட்டத்தில்** முஸ்லீம்களுக்கு எதிராக **போரிட இந்துக்கள் ஆயுதங்களை** எடுக்கவேண்டும் என அழைப்பு விடுத்து அங்கு கூடியிருந்த **இந்து மத தலைவர்கள் பகிரங்கமாக** பேசியுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருவர் **தனது மத நம்பிக்கையை** கவுரமாக பின்பறற் **அரசியல் சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டுள்ளது.** ஆனால் இப்படிப்பட்ட இந்து மத தலைவர்களால் நாட்டில் இப்போது **ஒருவித அச்ச உணர்வு** நிலவுகிறது. **வட இந்தியாவின்** சில இடங்களில் **கிறிஸ்தவ வழிபாட்டு தலங்கள்** சேதப்படுத்தப்படுள்ளன. **இந்த தாக்குதல்கள்** அனைத்தையும் பின் விளைவுகள் பற்றியும் கவலைப்படாமலும் எந்தவித அச்சம் இன்றியும் மேலே குறிப்பிட்ட அழைப்பு விடுத்துள்ளனர்.

இதுபோன்ற தாக்குதல்கள் நிகழ்ந்து வரும் நிலையில் பிரதமராகிய நீங்கள் **எதுவும் பேசாமல் அமைதியாக** இருப்பது மற்ற மத **வெறுப்புணர்வை தூண்டுபவர்களுக்கு** தைரியம் அளிப்பதோடு **நாட்டின் ஒற்றுமை** மற்றும் **ஒறுமைப்பாட்டிற்கு** அச்சுறுத்தலையும் **ஏற்படுத்தும்.** இதுபோன்று **பிரிவினையில் ஈடுபடும்** சக்திகளுக்கு எதிராக உறுதியாக நின்று **அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி** உங்களை கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறியுள்ளனர்.

# குடியரசு தின வாழ்த்துக்கள்





இந்தியா சுதந்திரம் அடைந்தாலும் இந்திய சட்டங்கள் முறைப்படுத்தப் படவில்லை. எனவே 1950ம் ஆண்டு இந்திய சட்டம் அம்பேத்கார் போன்ற சட்ட வல்லுனர்களால் இயற்றப்பட்டு அறிமுகப்படுத்தியபின் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய பதவிகளுக்கு தலைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு இந்திய அரசாங்கம் இயங்கின. அந்த ஆரம்ப நாள் ஜனவரி 26ம் தேதி குடியரசு நாளாக கொண்டாடப்படுகிறது. பல லட்ச மக்கள் காஷ்மீரிலிருந்து – கன்னியாகுமரி வரை பல ஆயிரம் பாஷைகள், பல அயிரம் மதங்கள், பல இன மக்கள் ஒன்று சேர்ந்து போராடி, உயிர் தியாகங்கள் செய்து, சிறை தண்டனைகள் அனுபவித்து பெற்ற சுதந்திர இந்தியாவை, இந்திய மக்களாலேயே அளுகை செய்த இந்த குடியரசு தின நாளை நினைவு கூறுவோம். நம் இந்திய மக்களுக்கு வாழ்த்துதல். இந்தியாவை ஆளுகிறவர்களுக்கும் வாழ்த்து கூறுகிறேன்.

– **ஜாமக்காரன்**

**JANUARY-2022**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.